TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 JUL 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1972 ஏப்ரல் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Radio sets for Police quarters.

* 888 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that Radio receiving sets have been fixed at the Police men's quarters at Ice House lines in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ஐஸ் ஹவுஸ் காவலர் குடியிருப்புத் தொகுதியின் காவலர் குடும்ப நலப் பிரிவில் வானொலிப் பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, ஐஸ் ஹவுஸ் காவலர் குடியிருப்பு இல்லத்தில் எத்தனை காவலர்கள் குடியிருக்கிறார்கள்? எல்லாக் காவலர்கள் வீடுகளுக்கும் வானொலிப் பெட்டி பொருத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கு 16 வானொலிப் பெட்டிகள் குடியிருப்பவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. அங்கு 58 குடியிருப்பு இல்லங்கள் இருக்கின்றன. இதுபற்றி ஏதாவது வேண்டுகோள் வருமானால் அதை இப்பொழுது அங்கிருக்கும் அந்த அமைப்பினர் கவனித்து வருகின்றார்கள்.

திரு. கே. எ. வகாப் : பொதுவாக, காவலர்களுடைய இல்லங்கள் எல்லாம் மிகவும் வசதிக் குறைவாக இருக்கின்றன என்பதை அரசு அறியுமா? நகரத்தில் மட்டுமல்ல; மற்ற மாவட்டங்களில் இருக்கும் காவலர் இல்லங்களுக்கும் குறைந்தபட்சம் தண்ணீர் வசதியும் விளக்கு வசதியும் செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 'அரசு முன்வருமா?' என்று உறுப்பினர் அவர்கள் கேட்பதைப் பார்த்தால் எந்த வசதிகளுமே இல்லை என்று அர்த்தமாகி விடக்கூடும். ஏற்கெனவே வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை மேலும் பெருக்குவதற்கு அரசு முயற்சிகள் எடுத்துக் கொள்ளும்.

Fake currency notes.

* 889 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that fake notes were seized by the Police at Tiruttani on 21–9–1971 and persons connected arrested; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) 21—9—1971 அன்று திருத்தணியில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் கள்ள நோட்டு எதுவும் இல்லை. மேலே ஓர் உண்மையான ஐந்து ரூபாய் நோட்டும் கீழே ஓர் உண்மையான நோட்டும் இவையிரண்டுக்கும் இடையில் ஐந்து ரூபாய் அளவுள்ள ஐந்து ரூபாயைப் போன்ற தோற்றமளித்த 131 விளம்பரத்துண்டுகள் வைத்துக்கட்டப்பட்ட ஒரு கட்டு அவர்களிடம் காணப்பட்டது. அவர்கள் ரூபாய் இரட்டிப்பு மோசடி செய்து பொது மக்களை ஏமாற்றும் நோக்கத்துடன் அதை வைத்திருந்தனர். வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : *

MR. SPEAKER : This is expunged.

திரு. ஆ. பரந்தாமன் : திருத்தணியில் கைது செய்யப்பட்டவர்களின் பெயர்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திருத்தணியில் கைது செய்யப்பட்டவர்கள் இருவர். திருத்தணி தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு குடிசையிலிருந்து, ஆவடியைச் சார்ந்த வேதாசலம், திருச்சியைச் சார்ந்த ரவி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டார்கள்.

திரு. எஸ். நல்லசாமி : கள்ள நோட்டு சம்பந்தமாக இரட்டிப்புத் தொழில் செய்யக்கூடியவர்களில் எத்தனை பேர் தமிழ்நாட்டில் பிடிக்கப்பட்டிருக்கின்றனர்? எத்தனை பேர் பொதுமக்கள் அவர்களிடம் ஏமாந்திருப்பார்கள் என்ற கணக்கை அறிய விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.